2007 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ, 5–4–2007 வியாழக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (5–4–2007) வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5–4–2007) வியாழக்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–51 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

40. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் முப்பத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

41. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஐம்பத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம்

ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

34. வேளாண்மைத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

35. வேளாண்மைத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2007. (தமிழ், ஆங்கிலம்)

36. "உழுவோர் உபயோகிப்போர் கையேடு" என்கிற சிறு நூல். (தமிழ்)

37. மானியக் கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

38. மானியக் கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

39. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2006–2007)

40. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை. (2006–2007)

41. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை. (2006–2007)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS